REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில்: 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

• மலர் 5] சென்னை: ஆடி 9உ புதன் (24—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 10உ வியாழன் (25—7—57) [இதழ் 33

விடுதலை பெற்ற டுனீஷியாவில் முடியாட்சிக்கு சீட்டு?

குடியரசாக மலரும்!

டுனிஸ், ஜூலை 28—

டுனீஷியா சீக்கிரமே ஒரு குடியரசாக மலரும் என்று தெரியவருகிறது.

இப்போது பிரதம மந்திரியாக இருக்கும் ஹபீப் பர் கூபா, குடியரசின் தலைவராவார் என்றும் கூறப்படுகிறது.

தனது கட்சிக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட பின்னர்

(4-ம் பக்கம் பார்க்க)

'அகில இந்தியா' நீடித்தால் தென்னாட்டில் பஞ்ச நிலையே நீடிக்கும்

இந்தக் கருத்துக்குக் கிடைத்து வரும் ஆதரவினைக் காணீர்!

பொருளாதார நிபுணர் பேசுவதைக் கேளீர்!

புள்ளி விவரங்களைப் பாரீர்!

கேலி பேசுவோருக்கு அண்ணா விளக்கம்

சென்னை, ஜூலை 24—

"மத்திய அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் தீட்டும் தொழில் திட்டங்களை நம் அரசாங்கம் நிறைவேற்றும்வரை, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நம் நாடு பஞ்சப் பகுதியாகத்தான் இருக்கும்.

"வடக்கிற்கும் தெற்கிற்கும் பல ஏற்றத்தாழ்வுகள் நிச்சயமாக உள்ளது என்று நாங்கள் கூறினால் கேலியாகக் கருதுகிறார்கள்; அரசாங்கம் தரும் புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொடுத்தே இதனைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வடக்கே 43 பேர் வருமானத்தில் 57 பேர் வாழ வேண்டியுள்ளது; தெற்கே 31 பேர் வருமானத்தில் 69 பேர் வாழவேண்டியுள்ளது. தென்னாட்டின் விவசாயினுடைய வருமானம் ஆண்டுக்கு ரூ. 382; வடக்கே விவசாயினுடைய வருமானம் ரூ. 512. இதைப் பார்த்தால் உண்மை வெளிப்படும். 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' என்று நாங்கள் இடக்கு பேசுவதாகவும், எங்களை மடக்கிவிடலாம் என்று கருதுகிறவர்களுக்கு இதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

"அகில இந்தியா என்பதின் பேரால் இன்றையத்தினம் தெற்குப் புறக்கணிக்கப்பட்டு, பின்தங்கியதாக ஆக்கப்படுகிறது.

"பொருளாதார நிபுணர் டாக்டர் தாமஸ் அண்மையில், கட்சி பேதமில்லாத முறையில் இதனை விளக்கியிருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். 'தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது; தென்னாட்டுக்குத் தனித்திட்டம் வேண்டும்' என்று அவர் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்.

"நாங்கள் கூறுவதைக் கேலியாகக் கருதுகிறவர்கள் அதே கருத்துக்கு நாலுபக்கங்களிலிருந்தும் கிடைத்துவரும் ஆதரவைக் கவனிக்க வேண்டுகிறேன்"

—என்று அண்ணா அவர்கள் இன்று சட்டசபையில் தொழில் மானியத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

மேலும் அவர் பேசுகையில், புதிய மாநில அமைப்பின் காரணமாக நம் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டத் தொழில் நிறுவனங்களைச் சுட்டிக்காட்டி அவைகளைப் புதுப்பிக்க வேண்டும் என்று யோசனை கூறினார்.

சிறு தொழில்களைத் தனியார் வசம் விடுவதன் மூலம் அவர்கள் உடனடியாக இலாபத்தைக் கருதியே இதனை மேற்கொள்ளுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அரசாங்கமே சில முக்கிய தொழில்களை நடத்த முன்வரவேண்டும் என்றும், இதனால் பொதுமக்கள் நம்பிக்கையுடன் பங்குகளை ஏற்று முதலீடு செய்வார்கள் என்றும், மேலும் அரசாங்கத்தின் சிறு சேமிப்புத் திட்டத்தின் வெற்றிக்கும் இது பயன்படும் என்றும் அவர் கூறினார்.

நிதியமைச்சர் 'பட்ஜெட்'டை சமர்ப்பித்துப் பேசுகையில், 'முந்திரிக் காடுகள் வளர்க்க இந்த ஆண்டு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது' என்று கூறியதையும், எதிர்க்கட்சியினர் மீது வசீகர பார்வை செலுத்தி 'இது சிந்திரி-முந்திரி' என்று பேசுபவர்களுக்குத் திருப்தியளிக்குமென்று கூறியிருந்ததையும் சபையில் நினைவுபடுத்தி அவர், தி. மு. க. சுவரொட்டியை அமைச்சர் பார்க்க வேண்டுமென்றும், அதில், 'முந்திரி வளர்க்க வேண்டும்' என்று அச்சிடப்படவில்லை என்பதை எடுத்துரைத்து, 'முந்திரித் தொழிலைத்தான் வளர்க்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்ததையும் அண்ணா அவர்கள் தெளிவுபடுத்தினார்.

இறுதியில் அவர், இலங்கைக்குக் கூலி வேலைக்காகச் சென்ற தமிழர்களின் அவல நிலையையும், பரிதாபத்தையும் எடுத்துரைத்து, ஆற்றல் இருந்தும் அமைச்சர்கள் செயல்பட முடியாமைக்குக் காரணம், அதிகாரம் டில்லியிடம் இருப்பதுதான் என்றும் சுட்டிக்காட்டினார்.

(அவரது பேச்சின் முழுவிவரம் பின்னர் வெளிவரும்)

பஸ் கட்டண உயர்வு:

அரசாங்க உத்தரவு

சென்னை, ஜூலை 24—

சென்னை நகர பஸ் கட்டணம் 1957 ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து சிறிது மாற்றப்பட்டிருக்கிறது. முதலாவது 'கட்ட'த்துக்கு 7 புதிய காசுகளும், தொடர்ந்து வரும் 'கட்டம்' ஒன்றுக்கு 3 புதிய காசு வீதமும் கட்டணம் வசூலிக்கப்படும். நகரப் போக்குவரத்து ஆலோசனைக் குழு சிபார்சின் மீது அரசாங்கம் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

டாக்டர் பி. வரதராசுலு நாயுடுவின் இறுதிச் சடங்குகள்

இடுகாட்டில் பல கட்சி தலைவர்கள் இரங்கலுரை

இல்லம் சென்று அண்ணா அவர்கள் இறுதி வணக்கம் செலுத்தினர்

சென்னை, ஜூலை 24—

நேற்று அதிகாலை இயற்கையெய்திய பழம் பெரும் காங்கிரஸ் தலைவர் டாக்டர் பி. வரதராசுலு நாயுடுவின் இறுதிச் சடங்குகள் நேற்று இரவு கிருஷ்ணாம்பேட்டை இடுகாட்டில் நடைபெற்றன.

மாலை 7 மணி வரை, சடலம் அவரது இல்லத்தில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பலரது பார்வைக்கும் வைக்கப்பட்டிருந்தது.

இரவு 7-30 மணியளவில் சடலம், இல்லத்திலிருந்து மயானக் கரைக்கு திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.



ஊர்வலத்தில் முதன் மந்திரி காமராசர், பெரியார் ஈ. வெ. ரா., மற்றும் மந்திரிகள், பல கட்சிப் பிரமுகர்கள் முதலானோருடன் ஆயிரக்கணக்கான மக்களும் சட்டசபை உறுப்பினர்கள், பல துறை அதிகாரிகள் முதலானோரும் கலந்துகொண்டனர்.

இறுதிச் சடங்குகளுக்குப் பிறகு மயானக்கரையில் நடைபெற்ற கூட்டத்தில், பெரியார் ஈ. வெ. இராமசாமி, காமராசர், திரு வண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை ஆகியோர், டாக்டர் நாயுடுவின் தேசத் தொண்டு குறித்தும், தியாக உள்ளத்தைப் பாராட்டியும், நற்பண்புகளைப் புகழ்ந்தும் பேசினர்.

அண்ணா வீரவணக்கம் செலுத்தினர்

அண்ணா அவர்கள், நேற்று பிற்பகல் டாக்டர் நாயுடு அவர்களின் இல்லம் சென்று, அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்திவிட்டு, குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் கூறி வந்தார்கள்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களும், டாக்டர் நாயுடுவுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்.

கழக செயலாளரைக் கொல்ல முயற்சி!

தேடியும் கிடைக்காததால் செயலாளரின் தந்தை படுகொலை

திருவைகுண்டம் அருகே சம்பவம்

திருவைகுண்டம், ஜூலை 21—

திருவைகுண்டம் அடுத்த ஆழ்வார்கற்குளம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் பார்வதிநாதனைத் தேடியும் கிடைக்காததால், அவரது தந்தை சிவனு என்பார் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

விவரம்

இசக்கித் தேவர் என்பார், கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் வசிக்கும் நல்லமாடன் என்பவர் வீட்டில் நெல் திருட முயற்சித்தபோது கண்டுபிடிக்கப்பட்டாலும், அகப்படாமல் தப்பிவிட்டாராம். இதனால், திருட முயற்சித்த இசக்கியை நல்லமாடன் திட்டினாராம்.

கேள்விப்பட்ட இசக்கித்தேவர் மறுநாள், நல்லமாடன் வீட்டிற்கும் ஆறுமுகம் என்பவர் வீட்டிற்கும் தீ மூட்டிவிட்டாராம்.

வீடுகள் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன.

இந்தச் சம்பவம் குடியிருப்பில் பெரும் பரபரப்பையூட்டியிருக்கின்றன.

உடனே இது குறித்து திருவைகுண்டம் போலீசில் புகார் செய்ததுடன், மந்திரி கக்கனுக்கும் தந்தி அடித்திருக்கிறார்கள் கிராமவாசிகள்.

இதற்கு, தி. மு. கழகச் செயலாளர் பார்வதிநாதன் முன்னின்று உதவியிருக்கிறார்; தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக, பாதுகாப்பிற்காக முயற்சித்திருக்கிறார். அவர், உள்ளூர் தாழ்த்தப்பட்டோர் சங்கச் செயலாளருமாவார்.

இதனால் கோபங்கொண்ட இசக்கித் தேவர், பார்வதிநாத

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—7—57 புதன்

நல்லார் மறைந்தார்!

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு'

என்ற வள்ளுவர் வாக்கிற் கொப்ப, தமிழ்நாட்டின் அரசியல் விழிப்புக்கு முன்னொரு நாள் ஊற்றுக்காலாக இருந்து, தனது முயற்சி வெற்றி பெற்றது கண்டு மகிழ்ந்திருந்த நல்லார் டாக்டர் வரதராசுலு அவர்கள், தமது எழுபதாண்டு முதுமையில் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். அவர் பிரிவு, பொதுவாக தமிழ் மக்களுக்கும் குறிப்பாகக் காங்கிரசுக் கட்சியினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இன்றைக்கு எழுபதாண்டுகளுக்கு முன்னர், சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த டாக்டர் வரதராசுலு அவர்கள், பள்ளிப் பருவத்தைத் தாண்டுவதற்குள்ளாகவே பெற்றோர்களை இழந்துவிட்டார். அத்தருணத்தில் அவர்கள் இறவாது தாம் பெற்றெடுத்த பிள்ளையைப் பாதுகாத்து வளர்த்து வந்திருப்பாராயின், இன்று எவர் மறைவு குறித்து தமிழ்நாடு கவல்கின்றதோ, அந்த நல்லவரை—அந்த நாட்டு விடுதலை வீரரை தமிழ்நாடு பெற்றிருக்குமா என்பதே ஐயத்திற்குரியதாகும்.

தம் இளமையிலேயே பெற்றோர்களை இழந்த டாக்டர் அவர்களுக்கு, நாட்டு விடுதலையில் நாட்டஞ் சென்றது. பெற்றோர்கள் பிரிவும் நாட்டில் எழுந்த அரசியல் விழிப்பும், ஆக இரண்டும் சேர்ந்து, அரைகுறைப் பள்ளிப் படிப்புடன் வெளியேறச் செய்துவிட்டது டாக்டர் வரதராசுலு அவர்களை.

பள்ளிப் பிள்ளையாக இருந்த காலையிலேயே டாக்டர் 'சீமை'த் துணிகளுக்குத் தீயிட்டார். அதன் மூலமாக தனது எதிர்காலப் பள்ளி வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டார்.

பின்னர், சித்த மருத்துவரானார். திருப்பூரில் தங்கி, மருத்துவத் தொழிலையும் நடத்தி பொருளீட்டத்தொடங்கினார்.

பள்ளிப் பருவத்தில் மூளத்த விடுதலை ஆர்வம், மருத்துவத் தொழிலால் பட்டுவிடவில்லை. டாக்டர் அவர்களை ஏகாதிபத்தியத்தின் விருந்தினராக ஏற்றுக்கொள்ளும் கட்டம் வரைக்கும் சென்றது.

அவருக்கிருந்த விடுதலை வேட்கை, அவரை நல்ல எழுத்தாளராக்கிற்று. கனல் கக்கும் தமிழ் பேச்சாளராக ஆக்கிற்று. உரம்கொண்ட நெஞ்சினராக மாற்றிற்று.

'பிரபஞ்ச மித்திரன்' என்ற பெயரில் தமிழ் கிழமை ஏட்டின் ஆசிரியரானார். ஏகாதிபத்திய ஆட்சிக்கு எரிச்சல் மூட்ட எழுதினார். அதற்காக ரூபாய் ஆயிரம் கட்ட வேண்டும் என பிரிட்டிஷ் ஆட்சி கட்டளையும் இட்டது.

அவருடைய விடுதலை போர் இத்துடன் நின்று விடவில்லை ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துப் பேசினார். அரச நிந்தனை குற்றஞ்சாட்டி டாக்டர்மீது வழக்குத் தொடர்ந்தது ஆங்கில ஆட்சி. அவ்வழக்கு மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்றது. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் டாக்டர் சார்பில் வாதிட்டார். உயர் நீதிமன்றத்தில் டாக்டர், வழக்கில் வெற்றிமாலை சூடினார்.

இந்தியத் துணைக்கண்ட அரசியல் வழக்குகளில், டாக்டர் வரதராசுலு அவர்களின் மதுரை வழக்கும் புகழ்மண்டிக் கிடப்பதாகும்.

சிறை வாழ்வு, அவர் அறியாததல்ல. பலமுறை சிறைத் துன்பங்களுக்கு அவர் பலியாகி உள்ளார்.

ஏகாதிபத்தியத்திலிருந்து அரசியல் விடுதலை பெறுவதில் மட்டுமே டாக்டரின் உள்ளம் பற்றுக்கொண்டிருக்கவில்லை. பிறப்பினால் உயர்வு-தாழ்வு—வேற்றுமை பாராட்டும் சிறு செயலை ஒழிப்பதிலும் அவருக்குப் பிடிவாதமான பற்று இருந்தது.

காங்கிரசு போர்வையில், காலஞ்சென்ற வா. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் நடத்தப்பட்டுவந்த குருகுலத்தில் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பித்து நடத்தும் கொடுமை தண்டவமாடியது. வா. வே. சு. அய்யர் போன்றவர்கள் பாடுபட்ட தேசியவிடுதலைக்கும் தாம் குறிக்கோளாகக் கொண்டுள்ள தேசிய விடுதலைக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை டாக்டர் காணலுற்றார். அக்கயமையை வெளிப்படையாக எதிர்க்கலானார்.

காங்கிரசுக் கூடாரத்திலே இருந்த சிலரின் விடுதலைவேஷம் கலைந்தது. அதே நேரத்தில் டாக்டர் அவர்களின் காங்கிரசு உறவும் மெள்ள மெள்ள சரியத் தொடங்கியது.

காலஞ்சென்ற டாக்டர் ஏகாதிபத்திய ஆட்சியிடமிருந்து நாட்டை மீட்கும் பணியுடன் இருந்துவிடவில்லை. பொதுவாக நாட்டு மருத்துவத்திற்கும் குறிப்பாக சித்த மருத்துவத்திற்கும்பணி புரிந்துள்ளார்.

டாக்டர் வரதராசுலு அவர்களின் 'தமிழ் நாடு' தினசரி—கிழமை இதழ்கள் தோன்றாமல் இருந்திருக்குமானால், இன்று மிகுதியாகக் காணப்படும் தமிழ் எழுத்தாளர்கள் இருந்திருக்க முடியாது என்றே நிச்சயமாகக் கூறிவிடலாம். அவர் தமிழ் பத்திரிகை உலகத்திற்குச் செய்துள்ள சேவை, தமிழ் மொழி உள்ளளவும் நிலைத்து இருக்கும். தமிழ் மக்களும் அவர் திருப்பெயரை மறவாது இருப்பர்.

தொழில் துறையிலும், வர்த்தகத் துறையிலும் வடநாட்டினர் ஆதிக்கம் வளர்ந்து வருவதை இருபது ஆண்டுக்கு முன்னமே, அவர், 'தமிழ் நாடு' இதழில் வன்மையாகக் கண்டித்து எழுதியிருந்ததை, தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

அவர் காலத்து அரசியல் தலைவர்களாக இருந்த கப்பலோட்டிய வீரத் தமிழர் சிதம்பரனாரும், திரு. வி. கல்யாணசுந்தரனாரும் ஏற்கனவே நம்மை விட்டுப் பிரிந்துவிட்டனர். இன்று டாக்டர் வரதராசுலு அவர்கள் பிரிந்த சோகச் செய்தியை, நாம் தாங்க முடியாது தாங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அவர் குடும்பத்தார்க்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரிமையாக்குகின்றோம்.

"மக்கள் அனைவருக்கும் பொதுவாகவும், மக்களின் இலட்சியமாகவும் இருப்பது 'விடுதலை' யேயாகும். அது இயல்பான உள்ளக்கிடக்கையாகும்."

இவ்வுயரிய இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே, மறைந்த டாக்டர் அவர்களின் பொது வாழ்வு அமைந்திருந்தது. நாமும் அந்த இலட்சிய வழியே செல்லுவோம்.

சட்ட சபையில் அண்ணா கருத்துரை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள்.

"ஆர்வத்தின் காரணமாக கலப்புத் திருமணம் செய்து கொண்டு, பின்னர் அதன் மூலம் பிறக்கின்ற குழந்தைகள், சமுதாயத்தில் ஏற்றுக் கோள்ளப்படாத நிலைமை நீடித்தால் பிரச்சினை தீர்ந்து விட்டதாகக் கருதமுடியாது.

"ஆகவே, கலப்புத் திருமணம் அதிகமாகப் பரவ வேண்டுமானால் அடிப்படையிலே நாட்டிலுள்ள சாதி மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டுமேன்பதை அறிவும், ஆர்வமும் உடைய அமைச்சருக்கும், இப்பேரவையின் உறுப்பினர்களுக்கும் சபாநாயகரின் மூலமாக கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"கலப்புக் திருமணம் என்பது இலட்சியத்திற்காகச் செய்யப்படுவது மாத்திரம் அல்லாமல், நம் சமுதாயத்தையே மாற்றியமைக்க எடுத்துக் கொள்ளப்படுகிற ஒரு தேசிய முயற்சியாக இருக்கவேண்டும். இந்த தேசிய முயற்சி, முயற்சி அளவிலே இல்லாமல் நிச்சயமாகச் செயல்பட வேண்டும்; அப்போதுதான் நிச்சயமாக சாதிபேதத்தை ஒழிக்க முடியும். ஆகவே, உடனடியாக சாதிபேதத்தைப் போக்குவதற்காக நல்ல சீர்திருத்தப் பிரச்சாரத்தில் நாட்டை ஆளுகின்ற சர்க்கார்—சகல துறைகளிலும் திட்டங்களிலும் — ஈடுபட்டாக வேண்டும்.

"'சாதியை உண்டாக்கியவர்கள் திருந்தி விட்டார்கள்; உலகப் போக்கை உணர்ந்து மாறி விட்டார்கள். ஆனால், இதர சாதிக்காரர்களால் விளையும் தொல்லை தான் அதிகம்' என்பதாக ஒரு உறுப்பினர் குற்றம் சாட்டினார். அது உண்மைதான்.

"சாதிப் புற்று தோன்றிவிட்டதால், அதிலே தோன்றியவை பலப்பல இன்றைக்குக் கிராமப்புறங்களிலே தம் தம் உரிமைகளை நிலைநாட்டிக் கோள்வதற்குப் போராடத்தான் போராடுகின்றன. தூங்கிக் கோண்டிருப்பவனைத் தேளும் கோட்டும்—பாச்சையும் கடிக்கும்; ஏமாந்தால் பாம்பும்கூட காலைச் சுற்றிககோள்ளும். இவற்றில் எதற்கு கோடிய விஷம் அதிகம் என்பதல்ல பிரச்சினை; எந்தப் புற்றிலிருந்து அவை வேளிப்பட்டவை எனக் கண்டுபிடித்து அந்தப் புற்றையே அழித்தால் ஒழிய அதிலிருந்துகிளம்புகின்ற விஷ ஜந்துக்கள்—தேள், பாச்சை, பாம்பு—நாட்டிலே பரவிக் கோண்டுதான் இருக்கும். புற்றையே அழிக்கும் வேலையில் மிக மிகத் துரிதமாக நாம் ஈடுபட்டாக வேண்டும்.

"நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்; 'சமூகம் இன்று ஒருவிதமாக இருக்கிறது; சாதியைப் பற்றிய பற்றுதல் தேர்தல் காலத்தில் வருகிறது,' என்று கனம் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். துரதிர்ஷ்டவசமாக அப்படித்தான் இருக்கிறது. ஆனால், அதிர்ஷ்டவசமாக அதனால் சில ஓட்டுகளும் கிடைக்கின்றன. (சிரிப்பு)

"எந்தத் தொகுதியில் எந்தச் சாதியார் பெருவாரியாக இல்லையோ அந்தத் தொகுதியில் அவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் எனக்கு தமிழில் வழங்கும் ஒரு கொச்சைப் பழமொழி நினைவுக்கு வருகிறது. 'சாதி சோறு போடுமா?' என்பர்; நம்முடைய சாதியைச் சேர்ந்தவர் என்கிற காரணத்திற்காக ஒருவனுடைய வறுமை காலத்தில்—பசியால் துன்புறும் காலத்தில் யாராவது அவனுக்கு சோறு போடுகிறார்களா என்று பார்த்தால், கிடையாது. ஆனால், தேர்தல் காலத்தில் சாதியை சொல்லித்தான் ஓட்டு கேட்கிறார்கள்; 'நமக்குள் எவ்வளவோ இருக்கலாம்; ஆனால் நாம் எல்லாம்.........' என்று சொல்வதற்குள்ளயே, 'ஆமாம் ஆமாம்; உங்களைத் தவிர வேறு யாருக்காவது ஓட்டுப் போடுவேனா?' என்று அவனும் ஒப்புக்கொள்கிறான்.

"எந்தச் சாதி பெருவாரியாக ஒரு தொகுதியில் இருக்கிறதோ அந்த சாதியைச் சேர்ந்தவர்கள்தான் கவனிக்கப்படுகிறார்கள். ஆகையினாலே சாதியினால் கிடைக்கக்கூடிய இலாபத்தைப் போக்க தேவையான அளவில் இந்த அடிப்படைப் பிரச்சினையாகிய சாதி பேதத்தை மாற்றியமைக்க நாட்டை ஆளுகின்ற சர்க்கார் நல்ல முறையில் திட்டங்களை வகுத்து, தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபடவேண்டும். இந்தப் பிரச்சாரத்திற்கு, 'அரிசன தினம்' மிகப் பொருத்தமானதாக இருக்கும்; 'அரிசன தின'த்தில் இதற்கான மன மாற்றத்தை மக்களிடத்திலே ஏற்படுத்துவதற்கு நல்ல முறையில் பிரச்சாரம் நடத்த வேண்டும்.

"சாதாரணமாக, பல விஷயங்களை நாம் கனவு காண்கிறோம்; நான் கண்ட அப்படிப்பட்ட ஒரு கனவை சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"ஆண்டவன் எத்தனையோ பெரிய திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறான் என்பதை, புராணங்களைப் படித்து அறிந்துகொள்ளலாம்; 'பலப்பல திருவிளையாடல்களைப் புரிந்த ஆண்டவன், இந்த நூற்றாண்டிலே ஒரு புதிய திருவிளையாடலை புரியமாட்டானா? ஒரு நாள் இரவு தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், நம் வீட்டிலிருந்து நாலைந்து பேர்கள் அவர்கள் வீட்டிற்கும், அவர்கள் வீட்டிலிருக்கும் நாலைந்து பேர்கள் பேர்கள் நம்முடைய வீட்டிற்கும் வந்துவிட்டால், விடிந்து பார்க்கும்போது இரண்டு பேர்களும் ஒன்றுகச் சேர்ந்து கலந்துவிட்ட திருவிளையாடலை ஆண்டவன் புரிய, அதைக் காண்பவனில் நான் முதல்வனாக இருக்க மாட்டேனா?'—என்று கனவு காண்பது உண்டு.

"ஆனால் அந்த ஆண்டவன் தம்முடைய திருவிளையாடல்களை பத்தோடு நிறுத்திக் கொண்டுவிட்டான். மனிதர்கள்தான் அதைப்போல் இப்போது செய்யவேண்டும். இப்படிச் செய்வதற்கு இந்த மந்திரி சபையைவிட திறமையான மந்திரிசபை காங்கிரஸ் கட்சியிலேயே இல்லை என்று சொல்லிக்கொள்ள பெருமைப்படுகிறேன்.

"அமைச்சர் அவர்கள் அன்றொரு நாள் அரிசன மக்களின் நிலைமையை எடுத்துக் கூறியபோது, 'இப்போதுதான் என் தங்கைகளின் கழுத்தில் வெள்ளியையும், தங்கத்தையும் பார்க்கிறேன்' என்று உணர்ச்சி ததும்பச் சொன்னது இன்னும் என்னுடைய செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உண்மையிலேயே இந்தப் பிரச்சினையை நன்றாக அறிந்தவர் — பெரிய தலைவர் என்று பெருமைப்பட்டு, அந்தச் சமுதாயத்தை ஒடுக்கும் வேறு எந்தச் சமுதாயத்தையும் கண்டிப்பதற்கு பூரண உரிமை உடையவர் இன்றைக்கு அந்த இலாகா பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து, இந்த நேரத்தில் நான் சொல்லுவேன்—நீங்கள் எங்களை விரும்பி ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும், ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், மதிப்பளித்தாலும் மதிப்பளிக்காவிட்டாலும் ஒன்றை மட்டும் உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்—'உங்கள் நிழலைப் போல அரிசன முன்னேற்றத்திற்கு நானும் என் கட்சியினரும் பாடுபடுவோம்' என்பதைச் சொல்லி இந்த மானியக் கோரிக்கையின்பேரில் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையின் மீது என் கருத்துக்களை கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்."

ஏட்டிக்குப் போட்டி!

வானவெளியில் ரஷ்யா மிதக்க விடவிருக்கும் 'செயற்கைக் கிரகம்' வடக்கிலிருந்து தெற்கு மார்க்கமாக உலகைச் சுற்றிவரக் கூடுமாம்!

அமெரிக்காவின் 'செயற்கைக் கிரகம்' கிழக்கிலிருந்து மேற்கு மார்க்கமாக உலகைச் சுற்றிவருமாம்!

28,739 நியாய விலைக் கடைகள்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஜூலை 22—

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இப்பொழுது மொத்தம் 28,739 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், இவற்றில் 5,953 கடைகள் (212 மொத்த விற்பனைக் கடைகள் உள்பட) கேரளத்திலும், 5,900 கடைகள் பம்பாயிலும், 5,433 கடைகள் மேற்கு வங்காளத்திலும், 5,377 கடைகள் பீகாரிலும் உள்ளன என்றும் மத்திய உணவு விவசாய அமைச்சர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

விவசாய அபிவிருத்திக்கு குழாய்க் கிணறுகள்

புதுடில்லி, ஜூலை 22—

1956—57-ம் ஆண்டில், விவசாய அபிவிருத்திக்காக மொத்தம் 361 குழாய்க் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன என்றும், அடுத்த ஆண்டில் 615 குழாய்க் கிணறுகளை வெட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும், மத்திய உணவு விவசாய அமைச்சர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

‘புற்றையே அழித்தாலன்றி விஷ ஜந்துக்கள் கிளம்புவதைத் தடுக்க முடியாது’

‘சாதி மனப்பான்மை ஒழிந்தாலன்றி கலப்பு மணம் பயன் தராது’

சட்டசபையில் அண்ணா கருத்து விளக்கம்

சென்னை சட்டசபையில், அரிசன முன்னேற்றத்திற்காகக் கோரப்பட்ட மானியக் கோரிக்கையின்மீது பிரரேபிக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முழு விவரத்தின் முதல் பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:—

“அரிசனப் பிரச்சினையைக் கவனித்துப்பார்த்தால்ஒவ்வொரு சட்டத்திலும் ஒவ்வொருவருடைய துணையை அவர்கள் நாடவேண்டியிருக்கிறது. ஆங்கில ஆட்சி வந்தவுடன்தான் அரிசன மக்கள் முதன்முதலில் நாகரிகமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அக்காலத்தில் வெளிவந்த இலக்கியத்தைப் பார்த்தால் தெரியும். அவர்கள்தான் முதன்முதலில் தாழ்த்தப்பட்டவர்களைத் தொட்டார்கள்; தங்கள் வீடுகளில் வேலைக்கு அமர்த்திக்கொண்டார்கள்; அவர்கள் தொட்டுக்கொடுத்த பண்டங்களை உண்டார்கள். அதன் மூலமாக அந்த சமூகத்தைப் பிடித்திருந்த கஷ்டம் அந்தக் காலத்தில் நீங்க வழியேற்பட்டது—ஓரளவுக்கு மதிப்புக் கிடைத்தது.

“அதற்குப் பின்னர் ஏற்பட்டிருந்த வெள்ளைக்கார ஆட்சியில்—நான் முன்பு படித்துக் காட்டியபடி—1919-ல் ஏற்பட்ட ‘லேபர்’ இலாகாவின் மூலம் அவர்களுடைய குறைபாடுகளைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு ஜஸ்டிஸ் கட்சி காலத்தில், எனக்கு நன்றாக நினைவிருக்கிறது; சபாநாயகர் மூலமாக இந்த சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக இருந்த காலஞ்சென்ற எங்கள் பெருந்தலைவர்களில் ஒருவரான சௌந்திர பாண்டியன் அவர்கள், ஆதி திராவிடரைப் பஸ்ஸில் ஏற்றக்கூடாதென்ற கொடிய சட்டத்தை நீக்கி, ‘அவர்களை ஏற்றுவிட்டால் மோட்டார்களுக்கு லைசென்ஸ் தரப்படமாட்டாது’ என்று ஒரு சட்டத்தை வகுத்தார்கள். ‘அந்தக் காலம் எப்படிப் பட்டது? அந்தக் காலத்தில் போடப்பட்ட சட்டம் எங்கே? இந்தக் காலத்தில் போடப்படுகிற சட்டம் எங்கே?’ என்று உங்கள் கவனத்துக்குக் கொண்டுவரச் சொல்கிறேனே தவிர, நாங்கள் ஒன்றும் புதிதாக—பெரியதாகச் செய்துவிட்டோம் எனப் பெருமை அடித்துக்கொள்ளச் சொல்லவில்லை. ஆயினும், இன்றைக்குச் செய்யக்கூடியது என்ன என்று பார்த்தால், ஒரு கோடி செலவழிக்கிறோம் என்று சொன்னால், ஒரு கோடி செலவழிக்கப்படுகிறது என்று எடுத்துக்காட்டுகிற அங்கத்தினர்கள் அத்தனை பேரும், ‘செலவழிக்கப்படுகின்ற தொகை எப்படி செலவழிக்கப்படுகிறது? அது எங்கெந்த இடத்துக்குப் போய்ச் சேருகின்றது?’ என்பதைப் பார்த்தால்தான் உண்மையிலேயே அவர்கள் வளர்ச்சியைத் தெரிந்துகொள்ள முடியும்.

“இந்த நேரத்தில் எனக்கு ஒரு சரித்திர வரலாறு நினைவுக்கு வருகிறது. பேரரசன் Fredric மக்களுக்குத் தேவையான நல்ல காரியங்களை செய்துகொண்டு வந்தான்; பெருந் தொகையைச் செலவிட்டான்; மக்களோ, ஏழ்மையிலேயே வாடியிருந்தார்கள். ஒரு பெரும் சபைக் கூடியிருந்த நேரத்தில் பல பிரபுக்கள் வீற்றிருந்த அந்த அவையிலே, ‘நான் ஏராளமான தொகையை மக்களுக்காகச் செலவிடுகிறேனே! ஆனால் மக்கள் வாட்டத்தோடும் வறுமையோடுமே இருக்கின்றார்களே! அதன் காரணம் என்ன?’ என்று பிரடரிக் பெருமகன் வினவ, பிரபுக்களில் ஒருவர்—முதியவர், ‘அதற்குப் பதில் நான் அளிக்கிறேன் மன்னா!’ என்று சொல்லி, தன் தட்டிலிருந்த பனிக்கட்டி ஒன்றை எடுத்து, ‘இதை மன்னரிடத்தில் அனுப்புங்கள்’ எனப் பக்கத்தில் இருந்த ஒரு பிரபுவிடம் கொடுக்க—அந்தப் பிரபு இன்னொரு பிரபுவிடம் கொடுக்க—இப்படியாக அந்தப் பனிக்கட்டி 22 பிரபுக்களின் கைபட்டுப்பட்டு அரசனைக்குப்போய்ச் சேர்ந்த காலத்தில் இரண்டுசொட்டுத் தண்ணீர்தான் மிச்சமாக இருந்தது. ‘இதுதான் இராஜ நீதி மன்னா’ என்று முதியவர் சொன்னதாக வரலாற்றுக் கதை நினைவுக்கு வருகிறது.

“அக்கதைபோல், இன்றைக்கு அரிசனத்துறை அமைச்சர் அவர்கள், ‘அரிசனங்களுக்காக ஒரு கோடி ரூபாய் உதவி செய்கிறோம்’ என்று சொன்னாலும் அந்தத் தொகை பிரபுக்களின் கைபட்டுப் பட்டு—பிறர் பணத்தைப் பெறுவதிலே பிரபுத் தன்மையுடைய பிரபுக்களின் கைபட்டுப் பட்டு—சேரிக்குப் போகிற நேரத்தில், இரண்டு சொட்டுத் தண்ணீராக மாறிவிடுகிறது என்று நினைக்கிறேன். ஆகவே, உண்மையிலேயே நம்மால் ஒதுக்கப்படுகின்ற இந்தத் தொகை எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதிலே மிக மிக கண்காணிப்புத் தேவை என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

“மற்றொன்று, குடியிருப்பு வசதிக்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப்பற்றி பல்வேறு மக்களால் சொல்லப்பட்டன ‘பல்வேறு கருத்துக்களைக் கூறவில்லை; ஒரே கருத்தை பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்தார்கள்’ என்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

“சிலர், ‘அரிசனங்களுக்கு வீடு தேவை’ என்றார்கள்; சிலர், ‘அரிசனங்களுக்கு வீடுகள் சேரியில் தேவை’ என்றார்கள்; வேறு சிலர் ‘சேரியிலேயே இருந்தால் ‘சேரி மன’ப்பான்மை இருக்கும்; ஊருக்குள் இருக்க வேண்டும்’ என்றார்கள்.

“இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருகுறை இருப்பதாக நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் புரிந்துகொள்ளலாம். ‘அரிசனங்களுக்கு சேரியில் வீடு வேண்டாம்; ஊருக்குள்ளேயே கட்டித்தர வேண்டும்’ என்று சொல்வதில் ஒருகுறை இருக்கிறது. அப்போது பல பேர்கள் அரிசனங்களாக மாறிவிடுகிறார்கள். அரிசனங்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகளைத் தாங்களும் பெறவேண்டும் என்ற காரணத்திற்காக தங்களை அரிசனங்கள் என்று சொல்லிக் கொள்வதற்கு பலபேர் தயாராக இருக்கிறார்கள். சர்க்கார்தான் அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஊருக்கு வெளியே அரிசனங்களுக்கு வீடுகட்டிக் கொடுத்து விடலாம் என்றாலோ, பிற சமூகத்தாரோடு கலந்து உறவாடிப் பழகும் நிலை இல்லாமல் போய் விடுகிறது; சேரிகள் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

“கனம் அங்கத்தினர் லாசர் சொன்னபடி ஒதுக்கி வைக்கும் தன்மைதான் காரணம். ‘ஆபிரகாம் லிங்கனின் அறிவு அமெரிக்க நாட்டுக்குப் பயன்பட்டது, நீக்ரோ பிரச்சினையை ஒழிக்க’ என்று சரித்திரம் கண்டறிந்தாலும்கூட—அன்றைக்கு அவர்களை ஒதுக்கித் தனியாக வைத்து முன்னேற்றம் காண முற்பட்டதால்தான் இன்றைக்கும் அந்தப் பிரச்சினை அந்நாட்டில் முழுக்கத் தீர்ந்தபாடில்லை; ஆங்காங்கே கொளிந்து கொண்டிருக்கிறது என்பதை உணருகிறோம்.

“ஆகவே, அவர்களை ஒதுக்கிச் சேரியில் வைக்கும் மனப்பான்மையும் சரியல்ல. ‘இந்தத் தலைமுறையினர் தான் கடைசித் தலைமுறை அரிசன மக்கள்; தாழ்த்தப்பட்ட மக்களின் கடைசித் தலைமுறையினர்; இனிமேல் ஏற்படக் கூடியவர்கள் எல்லோரும் தமிழர்கள்—ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்’ என்கிற விதத்திலே, ஏதாவது செய்யவேண்டும்.

“யார் யார் என்ன என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி விவாதிப்பதில் பயன் இல்லை. அனைவரும் கூடி ஏதாவது ஒன்றைத் தீவிரமாகச் செய்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்தாலொழிய, கோடிக்கணக்கான பணத்தை செலவழித்தாலும் சரி—மாறி மாறி மந்திரி சபை ஏற்பட்டாலும் சரி—மாற்றுக் கட்சியினர் அரசியலை ஆள வந்தாலும் சரி—இந்தப் பிரச்சினை அப்படியே நீண்டு கொண்டுதான் போகும். நான் வேண்டுவது, ஊருக்குள் வீடுகட்டிக் கொடுக்கும் நல்ல திட்டத்தைத் தொடர்ச்சியாக செய்து வருவதோடு மற்றொன்றையும் கவனித்தாக வேண்டும்.

“மாதத்திற்கு ஒரு தடவை ‘அரிசன தினம்’ என்று கொண்டாடப்படுவதாகக் கூறப்பட்டது. அந்த அரிசன தினங்கள் சிலவற்றைக் கண்ணுறுகின்ற துர்ப்பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அரசாங்க அதிகாரிகள் தம்தம் பட்டியலைப் படிக்கவும், அதிகாரிகளிடம் சலுகை பெற வேண்டியவர்கள் தாமே புன்னகையை அடிக்கடி வருவித்துக் கொள்ளவும், பக்கத்திலே இருக்கும் ஒருவரிடம் ‘இவர் யார்’ என்று அதிகாரி கேட்க ‘இவர்தான் இந்த வேலைக்கு காண்டிராக்ட் எடுத்துக் கொள்ள விண்ணப்பம் போட்டவர்’ என்று கவனப்படுத்துவதும் ஆக, இந்த முறையில் தான் அந்த அரிசன தினம்’ கொண்டாடப்படுகின்றது. இப்படிப்பட்ட தினங்களை நாம் வாரத்திற்கொருமுறை நடத்தினாலும்கூட நிச்சயமாக அரிசனங்கள் பிரச்சினை தீராது எனச் சொல்லுவேன்.

“ஆகையால், கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்—ஒரு ஐந்து ஆண்டு காலத்திற்கு அரிசன தினங்களை மிகவும் தீவிரமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயிர் ஊட்டும் வகையில், உள்ளத்துக்கு உறுதியை—வீரத்தை ஊட்டும் வகையில் மாபெரும் தினமாகக் கொண்டாடச் செய்தாலேயே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுவிடும். அரிசன தினத்தில் சேரியில்—ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் அன்றையத் தினம் பூராவும் 24 மணி நேரமும் ஒன்றாகக் கலந்து உறவாடத்தக்கவகையில் ஒரு ஒட்டுறவை ஏற்படுத்த, ஒரு பெரும் கோலாகலத் திருவிழாவாகக் கொண்டாடப்பட ஏதாவது வழிமுறைகளை வகுத்துத் தந்தால் அந்தச் சமுதாயத்தின் நிலைமையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யமுடியும். அன்றையத்தினம் ஆண்டவனை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள், வீழ்ந்து வணங்குவோம்—வணங்கச் சொல்வோம்; நல்ல காரியத்திற்கு வணங்கினாலும் வணங்கலாம். அதைவிட்டு, இந்த அரிசன தினத்தில் அதிகாரிகள் பட்டியல் படிப்பதும், அவரோடு உள்ளவர்கள் புன்னகை பூப்பதுமாக, சுவையற்ற தினமாக இருந்துவருவதை உடனடியாக மாற்றி அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

“மற்றும் ஒன்று; கலப்பு திருமணத்தைப் பற்றி இங்கே வலியுறுத்தப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில் கலப்புத் திருமணத்தை நான் ஆதரிப்பேன்; ‘கலப்புத் திருமணம் செய்து கொள்வதுதானே’ என்று நான் கேட்கப்பட்டால்—‘அந்தப் பருவத்தை நான் தாண்டிவிட்டேன்; எனக்கு அது அவசியமில்லாமல் இருக்கிறது’ என்று கூறவேண்டியிருக்கிறது.

“முதலமைச்சர் காமராசர் அவர்கள் நல்லவேளையாக திருமணம் ஆகாமல் இருக்கிறார்கள்; அவர் மட்டும் கலப்புத் திருமணத்திற்கு முன்மாதிரியாக இருந்து வழிகாட்டினால், இந்த மாநிலமே ஆச்சரியத்தில் அதிர்ச்சியுறும்; ‘பாரதமே’ துள்ளியெழும்; ‘கொள்கைக்காக வாழ்கிறவர்’ என்று எல்லோரும் பாராட்டுவார்கள்; அவர் தலைமையில் இயங்குவதில் நாம் பெருமைப்படுவோம். (சிரிப்பு)

“கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதற்குமுன் மற்றொன்றையும் யோசித்துப் பார்க்கவேண்டும். கலப்புத் திருமணத்தை செய்துவிட்டு, அதற்குப் பிறகு, ‘இத்திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்கிற பிரச்சினையை நாம் தீர்க்க வேண்டும்.

“சமுதாயத்தில் சாதி மனப்பான்மையை ஒழித்து சாதி பாகுபாடுகளையும் நீக்கவேண்டும். சாதிப் பாகுபாட்டை யார் ஆதரித்தாலும் சரி—எந்த உரிமையின் பெயரால் ஆதரித்தாலும் சரி—எத்தனை பழைய ஏடுகளை எடுத்துக் காட்டினாலும்சரி, சாதி பேதம் கூடவே கூடாது.

“இந்தச் சமுதாயத்தின் சாதி மனப்பான்மை மாற்றப்பட்டால் ஒழிய, கலப்புத் திருமணத்தால் பிறக்கின்ற குழந்தைகள் தாங்கள் மணம் செய்துகொள்ளுகின்ற நேரத்தில் நல்லபடியாக சமுதாயத்

(2-ம் பக்கம் பார்க்க)

அண்ணா தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம்

காஞ்சிபுரத்தை அடுத்த திருபருத்திக்குன்றத்தில் 12—7—57 இரவு 10 மணிக்கு அண்ணா அவர்கள் தலைமையில் தோழன் எம். அன்னப்பன்—தோழியர் பிரேமா வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

தோழர்கள், ம. கி. தசரதன், சி. எஸ். பூஞ்சோலை, வேணு, அப்பாவு ஆகியோர் தமிழ்த் திருமண முறையைப் பற்றியும், கலப்புத் திருமணங்களின் சிறப்பைக் குறித்தும், மணமக்களை வாழ்த்தியும் பேசினர்.

பின்னர், சி. வி. சம்பத் குழுவினரின் ‘இன்ப இரவு’ நாடகம் நடைபெற்றது.

இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

திருமண நிகழ்ச்சிகள் முடிந்ததும் அண்ணா அவர்கள் தோழர் பி கோவிந்தராசு அவர்களின் பெண் மகவுக்கு ‘செந்தாமரை’, என்றும், தோழர் பொன்னன் அவர்களின் மகவுக்கு ‘தமிழரசி’, என்றும் பெயர் சூட்டினார்; இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 4-ம் வரப்பெற்றோம்-நன்றி.]

சென்னை 16-வது வட்ட பொதுநல மன்றப் பொதுக்கூட்டம்

அன்பழகன், ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் கலந்துகொண்டனர்

16—7—57 இரவு 7-15 மணி அளவில் சென்னை 16-வது வட்டம் பொதுநல மன்றத்தின் சார்பில், மன்றச் செயலாளர் தோழர் வி. எல். அழகிரி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ., தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், மூர்த்தி, ஆசைமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் மூர்த்தியும், ஆசைமுத்துவும் பொதுநல மன்றத்திற்கும் தி. மு. கழகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிச் சுட்டிக்காட்டினர்.

அடுத்து பேசிய முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்களும் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் தற்கால அரசியல் நிலை குறித்தும், சட்டசபையில் நமது கழகத்தவர் ஆற்றிவரும் பணிகுறித்தும் விளக்கிப் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

'மேடு பள்ளங்களைத் திருத்தி சாகுபடி செய்தவர்கள் உரிமை பறிக்கப்படுவதேன்?'

'அரிசன விவசாயிகள் அவல வாழ்வைத் துடைக்க அரசாங்கம் முன்வருமா?'

'ஏழை—எளிய அரிசன மாணவர்கள் கல்வி வசதிக்கு ஆவன செய்ய வேண்டும்'

சென்னை சட்டசபையில் எம். ஆனந்தன் கோரிக்கை

சென்னை சட்டசபையில் அரிசன மானியக் கோரிக்கையின் மீது பிரரேபிக்கப்பட்ட வெட்டுப் பிரேரணைமீது கழக உறுப்பினர் எம். ஆனந்தன் அவர்கள் பேசியதன் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"அரிசனங்கள் உண்மையிலேயே முன்னேற்றம் அடைய வேண்டுமென அரசாங்கம் கருதினால் புதுப்புது சட்டங்களைப் போட வேண்டும். குறிப்பாக அரசாங்கத்தில் பணியாற்றும் சிப்பந்திகளுக்கு எப்படி மாதா மாதம் சம்பளம் கொடுப்பது போகத் தனியாக அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதோ அதுபோன்று கிராமப் பகுதிகளில் 10, 15, 20, 30 வருடங்களாக அடிமைகள் போன்று உழைத்து வரும் அரிசனங்களுக்கும் பணக்காரர்கள் மாதா மாதம் தரும் சம்பளம் போக, ஆண்டொன்றுக்கு ரூ. 50 தனியாக ஒவ்வொருவருக்கும் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் திடீர் சட்டங்களைப் போட வேண்டும். அதுபோன்று சட்டங்களை அரசாங்கம் போடுமானால் அரிசனங்களும், பின்தங்கிய வகுப்பினரும் அடிமை நிலையிலிருந்தும் வறுமை நிலையிலிருந்தும் விடுபட்டு, நாளுக்குநாள் முன்னேற்றம் அடைந்து வருவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"அரிசனங்களுக்கு நவாப்புகள் கொடுத்த மானிய நிலங்களை, 1951—52-ல் மழை இல்லாது பஞ்சம் ஏற்பட்டபோது, அவர்கள் பணக்காரர்களிடம் அதனை ஈடுவைத்து மனைவி, மைந்தர்களை காப்பாற்றிவந்தனர்; அந்த நிலங்களை அவர்கள் பணத்தைத் திருப்பி கொடுத்து மீட்டுகொள்ள வசதி இல்லாத காரணத்தால் பணக்காரர்கள் ரூ. 1-க்கு ரூ. $1\frac{3}{4}$ விகிதத்தில் வட்டியை உயர்த்தி மானிய நிலங்களைக் கிரயத்திற்குப் பெற்றுக்கொண்டார்கள்; மீண்டும் அந்த மானிய நிலங்களை அந்தப் பணக்காரர்களிடமிருந்து அரிசனங்கள் வாங்கிக்கொள்ளுவதற்கு வசதியாகப் பத்திரத்தில் கண்ட தொகையை மட்டுமே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும், அந்த மானியங்களை அவர்களுக்கே கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் சட்டங்களைப் போட்டு உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"அரிசனங்கள் 20, 30 வருடங்களாக மேடு-பள்ளங்களைத் திருத்தி சாகுபடி செய்து, சர்க்காருக்குத் தீர்வை செலுத்தி வந்தும்கூட, அதே நேரத்தில் அதை மேய்ச்சல் நிலம் என்றும், நத்தப் புறம்போக்கு என்றும், பாட்டைப் புறம்போக்கு என்றும் சொல்லி, பழைய பாத்தியதையை ரத்து செய்திருக்கும் திடீர்த் திட்டங்களை மாற்றி, ஏழை அரிசனங்களுக்கு அந்த நிலங்களை 'பட்டா' செய்து கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

"அதுபோன்று, இருக்கக் கூடிய புறம்போக்கு, தரிசு நிலங்களை நிலமில்லாத ஏழை, பின்தங்கிய வகுப்பினர்களுக்குப் 'பட்டா' செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"மேலும், திண்டிவனம், வளவனூர், திருக்கோயிலூர், திட்டக்குடி, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி இன்னும் இதுபோன்ற தொகுதிகளில் வசிக்கும் அரிசன மக்களுக்கு, அவர்கள் குடியிருக்கும் இடங்களுக்கு அருகில் புறம்போக்கு, பட்டா நிலம் எதுவும் கிடையாது. பணக்காரர்களின் 'பட்டா' நிலங்கள்தான் இருக்கிறது. அரிசனங்களுக்கு அந்தப் பணக்காரர்கள் 'பட்டா' நிலங்களை வாங்கி, அங்கே அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கட்டித் தரப்படும் வீடுகளை கிராமங்களோடு இணைத்து, 'அரிசனங்களும், பின்தங்கிய வகுப்பினர்களும் அவ்வாறு வீடு கட்டிக்கொள்ள உரிமை உண்டு' என்று அரசாங்கம் திடீர்ச் சட்டங்களைப் போட வேண்டுகிறேன்.

"குறிப்பாக, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம வட்டாரத்தில் வசிக்கும் அரிசன இளைஞர்களில் அதிகம் பேர் உத்தியோகத் துறையில் இல்லை. தற்சமயம் படிப்புத் துறையிலுள்ள மாணவர்களுக்காக கள்ளக்குறிச்சியில் ஒரு தொழில்முறைக் கல்விக்கூடம் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தற்போது எங்கள் தாலுகாவில் அரசாங்கம், அரிசன மாணவர்கள் 30 பேருக்கு மட்டுமே உதவித் தொகை அளித்துவருகிறது; அந்தச் சலுகை போதாது; குறைந்தது 100 மாணவர்களுக்காவது அச்சலுகை தரப்பட வேண்டும்.

"சின்னசேலம் பிர்க்காவில் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அங்கு படிக்கும் ஏழை மாணவர்களுக்கு ஒரு தங்கும் விடுதியும், சங்கராபுரம் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு ஒரு தங்கும் விடுதியும் நிறுவித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

"திருக்கோயிலூரிலிருந்து வரும் பஸ் பாதையை சங்கராபுரம் — கள்ளக்குறிச்சி வரையிலும் தார் போட்டுத் தரவேண்டும். சங்கராபுரம் பகுதியில் உள்ள ஏழை-எளிய விவசாய மக்கள் திருக்கோயிலூர், கள்ளக்குறிச்சி போன்ற இடங்களுக்கு அரசாங்க அலுவலாகச் செல்லுகையில் நேர் பஸ்களில் இடம் கிடைக்காமல் ஆங்காங்கே தங்கி நிற்பதால், குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாமல் அவதியுறுகிறார்கள். கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரம், பூட்டை, செம்பராம்பட்டு, அரசம்பட்டு, பாலப்பட்டு ஜமீன் வரையிலும் 'டவுன் பஸ் சர்வீஸ்' ஒன்று ஏற்படுத்தினால் அங்குள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். அப்படிச் செய்வதற்கு வழிவகை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

"சங்கராபுரம் பிர்க்காவுக்கு 15 மைல்களுக்கு அப்பாலுள்ள கொடியனூர், புளியாங்கொட்டை, ஆனைமடுவு, மூலக்காடு, லக்கிநாயக்கன் பட்டி, பயிஞ்சிபட்டு, புதுப்பட்டு போன்ற கிராமங்களில் ரோடுகள் இல்லாமல் ஆங்காங்கு வசிக்கும் மக்கள் அவதியுறுகிறார்கள். குறிப்பாக, பிரசவ வேதனையால் கஷ்டப்படும் பெண்கள் நகரத்திலுள்ள மருத்துவ மனைகளுக்குச் செல்லவோ, விவசாய மக்கள் நகரத்திலுள்ள போலீஸ் நிலையங்களுக்கோ, தாலுகா கச்சேரிகளுக்கோ சென்று வருவதற்கோ சரியான வழிகள் கிடையாது. புதுப்பட்டு அஞ்சல் நிலையம் இருக்கும் இடத்தில் சர்க்கார் ஒரு போலீஸ் நிலையமும், ஒரு மருத்துவமனையும் கட்டித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"பாலப்பட்டு அருகில் பெருமாத்தாமலை ஓரத்தில் மணிமுத்தாறு நதி நீர்த்தேக்கத் திட்டத்தையும், மாயம்பாடி, பொட்டியம் அருகாமையில் கோமுகா நதி நீர்த் தேக்கத்தையும் அரசாங்கம் உடனடியாகச் செய்து தரக் கோருகிறேன்.

"துருகம் பிர்க்காவில் 20 மைல் தூரத்தில் வசிக்கும் மக்கள் போதிய வசதிகள் இல்லாமலும், போக்குவரத்துக்கு இடமின்றியும் அவதியுறுகின்றனர். நாகலூரில் ஒரு மருத்துவமனையை அரசாங்கம் நிறுவவேண்டும். பாக்கம் பிர்க்காவில் அத்தியூர் சந்தைக்கு ஏராளமான மக்கள் வருவதால் தொத்து நோய் பரவுகிறது; ஆகவே, அத்தியூரிலும் ஒரு மருத்துவமனையை நிறுவ வேண்டும்.

"அந்த வட்டாரங்களில், அரிசன மக்கள் வசிக்கும் இடங்களில் போக்குவரத்துக்கு வசதியாக நல்ல பாதைகளை அமைத்துத் தருமாறு கோருகிறேன். இவர்களுக்குச் செய்யவேண்டிய சௌகரியங்களை, அரசியலார் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும். முக்கியமாக இந்த வட்டாரங்களில் வசிக்கும் அரிசன மக்களுக்கு உடனடியாகக் குடியிருப்பு வசதிகளும் செய்துதர வேண்டும்."

சென்னை—மயிலை சிந்தனையாளர் கழகப் பொதுக்கூட்டம்

அண்ணா

கலந்துகொள்வார்

26—7—57 மாலை 6-மணிக்கு சென்னை—மயிலை சிந்தனையாளர் கழகப் பொதுக்கூட்டம் மயிலை சித்திரக்குளம் அருகில் நடைபெறும்; தோழர் ந. வேதாசலம் அவர்கள் தலைமையில் அண்ணா அவர்களும், தோழர்கள் கண்ணதாசன், பி. ஆர். கோகுலகிருஷ்ணன், ஜேசுபாதம் ஆகியோரும் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை—8-வதுவட்டம்
(பெத்துநாய்க்கன்பேட்டை)
சக்கரை செட்டித் தெருவில்
(பத்மனாபா தியேட்டர் அருகில்)
26—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. எஸ். தினகரன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
சி. ஆர். பாலசுந்தரம்

★

பர்கூர் :
பாடசாலை மைதானத்தில்
26—7—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
என். எஸ். இளங்கோ

தாளமுத்து படுகொலை வழக்கு

ஆகஸ்டு முதல் கிழமை துவங்குகிறது

திருவைகுண்டம், ஜுலை 22—

தூத்துக்குடி தி. மு. கழகச் செயல்வீரர் தோழர் தாளமுத்து கடந்த 22—5—57 அன்று காலை நகரில் படுகொலை செய்யப்பட்டதை ஒட்டி, பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட கம்யூனிஸ்டுகளான நீதிராஜன், சேவியர் என்ற இருவர், மற்றும் இராமனுதன், செந்தூர், செந்தூர்-பாண்டியன், நடராசன் ஆகியோர் உட்பட 10 பேர்மீது தூத்துக்குடிப் போலீசார் வழக்குத் தொடர்ந்திருப்பது தெரிந்ததேயாகும்.

வழக்கு இப்போது, வரும் ஆகஸ்டு முதல் வாரத்தில் திருவைகுண்டம் சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் நடைபெறலாம் என்று கூறப்படுகிறது.

கழகச் செயலாளரை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

னைக் கொல்லத் தீர்மானித்து அவரைத் தேடினராம்; அவர் அகப்படாமல் போகவே, தேவர், பார்வதிநாதனின் தந்தையான சிவனு என்பவரை கழனி ஒன்றில் மடக்கி வேல் கம்புகொண்டு தாக்கிப் படுகாயப்படுத்திக் கொன்று விட்டதாகக் கூறப்படுகிறது.

போலீசார் இடத்திற்கு விரைந்து சென்று புலன் விசாரணை செய்து வருவதாகவும், எதிரி தலைமறைவாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கைத்தொழில் அபிவிருத்திக் குழு

சென்னை, ஜுலை 24—

சென்னை மாநில கைத்தொழில் அபிவிருத்திக் குழுவின் 15 உறுப்பினர்களில் ஒருவராக, சிம்சன் கம்பெனி மானேஜிங் டைரக்டர் எஸ். அனந்தராமகிருஷ்ணனை அரசாங்கம் நியமித்துள்ளது. மாநிலத்தில் எந்தெந்த ரகக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யலாமென்பது பற்றி இக்குழு திட்டம் வகுத்து அறிவிக்கும்.

சோஷலிஸ்டு கட்சி போராட்டம்

வரும் ஆகஸ்டுமுதல், தமிழ்நாடு சோஷலிஸ்டுக் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும், அதற்கான தயாரிப்புகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அகில இந்தியச் செயற்குழுவினர் அனுமதி தந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

அகில இந்திய தபால் ஊழியர்சங்கக்கூட்டம்

அகில இந்திய தபால் ஊழியர் சங்கம் (மூன்றும்-நான்காம்பிரிவு) மவுண்ட்ரோடு கிளைகளின் சார்பில், 25—7—57 அன்று மாலை 6-30 மணிக்கு, மவுண்ட்ரோடு தபால் நிலையக் கட்டிடத்தில் நடைபெறும். கூட்டத்திற்கு சங்கத் தலைவர் பி. பாலசுப்பிரமணியம் ('சண்டே அப்சர்வர்' ஆசிரியர்) தலைமை தாங்குவார். தோழர்கள் ஜி. இலட்சுமணன், பி. எம். கிருஷ்ணன் மற்றும் பலர், எதிர்நோக்கியுள்ள வேலை நிறுத்தம்பற்றிப் பேசுவர்.

விடுதலைபெற்ற டுனீஷியா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பர்கூபா 'வரும் வியாழனன்று தேசிய அரசியல் நிர்ணயச் சபை கூடி டுனீஷிய அரசியல் முறையைத் தீர்மானிக்கும்' என்று கூறியிருக்கிறார்.

'அன்று, முடியாட்சிக்கு ஒரு முடிவு காண்பது நிச்சயம்' என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

அரசியல் நிர்ணய சபையில், பர்கூபா சார்ந்துள்ள நியோ தெஸ்தர் கட்சியினர்தான் பெருவாரியாக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மறுப்பு

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச்செயலாளர் இரா. அதிமணி அவர்கள் கீழ்க்கண்ட மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளார் :—

"'ஆர். ஆர். கே. டேலர், இலங்கை தி. மு. க. பொறுப்பாளர்,' என்ற ஒப்பத்துடன் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்ற முறையில், சில பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கும் அறிக்கையைக் கண்ணுற்று வருந்துகிறோம்.

"ஆர். ஆர். கே. டேலர், இ. தி. மு. க. பொறுப்பாளர் அல்லவாதலால், அவ்வறிக்கைக்கு இலங்கை தி. மு. க. தனது பலத்த ஆட்சேபணையையும் கண்டனத்தையும் தெரிவிக்கிறது.

"திரு. டேலர் கடிதத்திலிருந்து 'தமிழரின் உரிமைப் போராட்டத்தை இ. தி. மு. க. கடைசி நேரத்தில் காலை வாரிவிடுகிறது' என்ற ஒரு தவறான எண்ணம் உண்டாக இடம் ஏற்படுகிறது.

"திரு. டேலர் என்பாருக்கும் இ. தி. மு. க.-விற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. மேலும் இலங்கை தி. மு. கழகத்திற்கும் தமிழரசுக் கட்சிக்கும் கடந்த ஒன்பதாண்டுக் காலமாக இருந்துவரும் தோழமையையும் நல்லுறவையும் நாடறியும்.

"தமிழரசுக் கட்சியின் 'ஆகஸ்டு அறப்போர்'க் கோரிக்கைகளில் சமஷ்டி நீங்கலாக ஏனையவற்றை இலங்கை தி. மு. கழகம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. என்றாலும், 'ஆகஸ்டு அறப்போரு'க்கு இலங்கை தி. மு. கழகம் தனது போராதரவை எந்தத் துறையில் அளிக்க முடியும் என்பதை அண்மையில் கூடவிருக்கும் மத்திய செயற்குழுவில், விரிவான பரிசீலனைக்குப்பின் தீர்மானிக்கப் படவிருக்கிறது. அதன் பின்னரே, 'ஆகஸ்டு அறப்போர்,' குறித்து இலங்கை தி. மு. க. தனது முடிவான கொள்கையை விளக்கி அறிக்கை வெளியிட முடியும் என்பதை நினைவூட்டுகிறோம்.

"இறுதியாக, திரு. டேலர் என்பவர் வெளியிட்டிருக்கும் அறிக்கைக்கும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்."

'எகிப்தின் சுதந்திரம் பாதுகாக்கப்படும்'

தலைவர் நாசரின் முழக்கம்

எகிப்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உறுதிகொண்டிருப்பதாக எகிப்து குடியரசின் முதல் தேசியப் பார்லிமெண்டில் ஜனாதிபதி நாசர் கூறினார்; மக்களின் நல உரிமைகளைக் காப்பதாக அவர் வாக்களித்தார்.

6 கோடி பவுன் செலவில் 5-ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்போகும் அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்தின் முதல் கட்டத்தை ஆரம்பிப்பதற்கான மசோதா விரைவில் வருமென்று அவர் அறிவித்தார்.

பார்லிமெண்டுக் கட்டிடத்தில், மன்னர் பரூக் காலத்திலிருந்த எல்லா அரச குடும்பச் சின்னங்களும் அழிக்கப்பட்டதாம்! இன்றைய எகிப்தின் கலாச்சாரத் தன்மையுடன் மன்றம் அலங்கரிக்கப்பட்டிருந்ததாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.